*Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 5(1) 2022*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Received:26th May 2022/Accepted: 1st July 2022*

# பௌத்த சம்மாகம்மந்த மற்றும் இஸ்லாமிய அல்-அமல் அத்-தய்யிப் நற்செயல் பற்றிய பௌத்த-இஸ்லாமிய கலந்துரையாடல்

# (Buddhist "*Samma Kammanta*" and Islamic *Al- Amal At-Tayyib*: A Discussion on Right Action between Buddhism and Islam)

Fathuma Afra[1] & Mohamed Ashath[2]
[1] Temporary Assistant Lecturer at South Eastern University of Sri Lanka & MA® University of Peradeniya Sri Lanka
[2] PhD ® International Islamic University Malaysia
[1]aframif@gmail.com & [2] msmaasath@gmail.com

## Abstract

*Religious scriptures encourage the right action for every human being, whether they are followers of that religion or not. Although, Buddhism and Islam explain the important of the right action in a unique manner, but the meetings of Buddhist and Muslim most often portray as violent confrontation in Modern world. The objective of this paper to analyze and understand the views of right action from the ideas of Buddhist Samma Kammanta and Islamic Al- Amal At-Tayyib from for the initiation of good interreligious understanding. This research applies library-based qualitative methodology, in which the researchers use data that includes textual analysis on written materials such as books, journal articles, and internet sources. The outcomes disclose that although both religions have fundamentally different doctrines yet share a similar scope on right action which prioritize humanity and human wellbeing. This study guides to eliminate misunderstandings about religions: Buddhism and Islam, and to succeed in a process of understanding and for nonviolent commitment among the diverse religious groups. To this end, this paper concludes that to what extent Buddhist Samma Kammanta tenets can assimilate Islamic Al- Amal At-Tayyib doctrines and practices, paving the way for interreligious dialogue for peace. And drawing on some fundamental commonalities between Buddhism and Islam.*

***Key words:*** *Samma kammanta, Al- Amal At-Tayyib, Islam, Buddhism, Buddhist Muslim Understanding*

### ஆய்வுச் சுருக்கம்

மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒவ்வொரு மனிதனுக்கும் நற்செயலை மத நூல்கள் ஊக்குவிக்கின்றன. இருப்பினும், பௌத்தமும் இஸ்லாமும் நற்செயலின் முக்கியத்துவத்தை தனித்துவமான முறையில் விளக்குகின்றன, ஆனால் பௌத்த மற்றும் முஸ்லீம்களின் சந்திப்புகள் பெரும்பாலும் நவீன உலகில் வன்முறை மோதலாக சித்தரிக்கின்றன. இதனடிப்படையில் பௌத்த சம்ம கம்மந்தா மற்றும் இஸ்லாமிய அமல் அல்-அத்தாயூபா ஆகியோவற்றின் கருத்துக்களில் இருந்து நற்செயல்களின் கருத்துக்களை பகுப்பாய்வு செய்து புரிந்துகொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ் ஆய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி தரமான முறையைப் பயன்படுத்துகிறது, இதில் ஆராய்ச்சியாளர்களின் புத்தகங்கள், பத்திரிகை கட்டுரைகள் மற்றும் இணைய ஆதாரங்கள் போன்ற எழுதப்பட்ட இலக்கிய மீளாய்வுகள் பகுப்பாய்வு உள்ளடக்கிய தரவைப் பயன்படுத்தப்பட்டுள்ளது இரண்டு மதங்களும் அடிப்படையில் வேறுபட்ட கோட்பாடுகளைக் கொண்டிருந்தாலும், மனிதநேயம் மற்றும் மனித நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கும் நற்செயல்களில் ஒரே மாதிரியான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்கின்றன என்பதை முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. மேலும், பௌத்தம் மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களைப் பற்றிய தவறான புரிதல்களை அகற்றவும், பல்வேறு மதக் குழுக்களிடையே அகிம்சை அர்ப்பணிப்புக்கான புரிதல் மற்றும் செயல்பாட்டில் வெற்றி பெறவும் இந்த ஆய்வு வழிகாட்டுகிறது. இந்த நோக்கத்திற்காக, பௌத்த சம்ம கம்மந்த கொள்கைகள் எந்த அளவிற்கு இஸ்லாமிய அல்-அமல் அல்-தாயிப் கோட்பாடுகளையும்

நடைமுறைகளையும் ஒருங்கிணைக்க முடியும், அமைதிக்கான மதங்களுக்கிடையேயான உரையாடலுக்கு வழி வகுக்கும் என்று இந்த கட்டுரை முடிவடைகிறது. மேலும் பௌத்தத்திற்கும் இஸ்லாத்திற்கும் இடையே உள்ள சில அடிப்படைப் பொதுமைகளை பற்றியும் ஆய்வுசெய்யப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்** : சம்மா கம்மந்தா, அல்-அமல் அத்-தய்யிப், இஸ்லாம், பௌத்தம், பௌத்த இஸ்லாமிய உறவு

## 1. அறிமுகம்

ஒரு மனிதனை நல்லவனா அல்லது மோசமானவனா என அளவிடுவது அவனது நடத்தையில் வெளிப்படும் செயல்களாகும். மனிதன் தனது வாழ்வை நற்செயல்களின் அடிப்படையில் அமைத்துக் கொண்டு பிற மனிதனுடன் நற்செயலுடன் நடந்து கொள்வதற்கு சமயங்களும் முன்மாதிரியான பல வழிகாட்டல்களை முன்வைத்துள்ளன. அவ்வகையில் பௌத்தம் மற்றும் இஸ்லாமிய மார்க்கமும் நற்செயல் தொடர்பாக மனிதனுக்கு வழிகாட்டியுள்ளன.

பௌத்தம் என்பது பாரம்பரிய மதங்களில் ஒன்றாகும். இது இந்தியாவில் தோன்றி வளர்ச்சியடைந்தது. இதனை தோற்றுவித்த கௌத்தம புத்தர், மனிதன் துன்பத்திலிருந்து விலகி, துன்பத்திற்கான தீர்வினை அடையும் நோக்குடன் வெவ்வேறு ஆசிரியரிடமிருந்தும் ஞானத்தை அடைய தனது பயணத்தைத் தொடங்கினார். ஏழு ஆண்டுகள் அலைந்து திரிந்த பிறகு ஒரு போதியின் கீழ் (போதி மரம்) தியானித்திருக்கும் போது, வாழ்க்கையில் எதிர்மறையான நிலைமைகள் இருந்தாலும் துன்பத்தை நிர்வகிக்க முடியும் என்பதனை உணர்ந்தார். அருந்தவத்தின் பலனாய் நிருவாணம் அடைந்தார் (Warren, 2012). அதனையே முதலில் தனது ஐந்து தோழர்களுக்கும் குசினாராவில் போதித்தார் (வல்பொல ராகுல, 1989). அவ்வாறு புத்தர் போதித்த போதனைகள் பல உள்ளன. அப்போதனைகளில் முதலாவதாக இரண்டு விடயங்களிலிருந்து விலகி இருக்குமாறு புத்தர் கூறினார். அவை, *''யோசாயங் காமேசு காமசுகல்லியாகானுயோகோ'' – 'துறவிகள் காம சுகத்தில் பற்றுடையவராக, காம சுகத்தில் திளைத்து வாழ்வது உசிதமல்ல.* என்றார். இரண்டாவதாக, *''யோசாயங் அத்தகிலமாதானுயோகோ துக்கோ அனரியோ அனத்தசங்ஹிதோ'' 'உடலை பல்வேறு துன்பங்களுக்குட்படுத்துதல் மென்மேலும் துன்பத்தையே தரும். இதனால் மோட்சனமான உன்னத நிலையை அடைய முடியாது. ஆவ்வாறு உடலை துன'பத்திற்கு உட்படுத்துவது அர்த்தமற்றதாகும்''* என்றார் (ஞானானந்த தேரர், 2019). அத்தோடு, அவ்விடத்திலே நான்கு உண்மைகளான துக்க (Dukka)- துக்கம், ஸமுதய (Samudaya) - துக்க உற்பத்தி, நிரோத (Nirodha) - துக்க நீக்கம், மக்க (Magga) - துக்கத்தை ஒழிக்கும் மார்க்கம்'' என்பன பற்றியும் விளக்கினார். அதாவது, துக்கம் என்பது தவிர்க்க முடியாதது. துக்கத்திற்குக் காரணம் மனிதனுடைய ''அவா'' எனும் ஆசையாகும். இவ்வாறு மனிதனுக்கு ஏற்படும் துன்பத்தினை நிர்வகிக்க முடியும் என மூன்றாவது உண்மையினூடாக குறிப்பிடுவதோடு, நான்காவது உண்மையான 'மக்க' எனும் மார்க்கத்தினூடாக துன்பத்திலிருந்து மனிதன் மோட்சமடைவதற்கான வழிகளையும் குறிப்பிட்டுள்ளார்.

நான்கு மேன்மையான உண்மைகளில், துக்கத்தை ஒழிக்கும் 'மார்க்கமே – மக்க' நான்காவது மேன்மையான உண்மை என்று பௌத்தம் சொல்கின்றது. இது ***''துக்க நிரோத காமினி படிபதா ஆரியசச்ச''*** என பாலி மொழியில் கூறப்படும். இதுவே மத்திய வழி ***(மஜ்ஜிமா படிபதா***) என்றழைக்கப்படுகின்றது. ஏனெனில் இது நடுநிலையைப் பின்பற்றுவதாகும். இவ்வழி ''சாதரணமானது, பொதுமக்களால் பின்பற்றப்படுவது'' அதுதான் *''அயமேவ அரியோ அட்டாங்கிகோ மாக்கோ''* எண்சீர் மார்க்கம். எனவே எண்சீர் மார்க்கம் அல்லது ஆர்ய அஷ்டாங்கிக மார்க்கம் என்பது புத்தர் கண்ட நான்கு பெரும் உண்மைகளில், துக்கத்தை இல்லாதொழிக்கும் வழிமுறையை விளக்கும் நான்காவது உண்மையின் விரிவாக்கமாகம் (வல்பொலராகுல, 1989: 52). கீழ்வரும் அட்டவனையானது, எண்சீர் மார்க்கம் பற்றியும் அதன் மொழி விளக்கம் பற்றியும் விளக்கத்தைத் தருகின்றது (பியதஸ்ஸ தேரர், : 1979).

| | ஆர்ய அஷ்டாங்கிக மார்க்கம் (எண்சீர் மார்க்கம்) | ஆங்கில மொழியில் | தமிழ் மொழி விளக்கம் |
|---|---|---|---|
| 01 | சம்மாதிட்டி | Right Understanding (Right View) | நற்காட்சி |
| 02 | சம்மாசங்கப்பம் | Right Thought (Right Intention) | நற்சிந்தனை |
| 03 | சம்மாவாசா | Right Speech | நல்வாய்மை |
| 04 | **சம்மாகம்மந்தா** | **Right Action** | **நற்செயல்** |
| 05 | சம்மா அஜீவ | Right Livelihood | நற்ஜீவனோபாயம் |
| 06 | சம்மாவாயாம | Right Effort | நல்லூக்கம் |
| 07 | சம்மாசதி | Right Mindfulness | நற்கடைபிடி |
| 08 | சம்மாசமாதி | Right Concentration | நல்லமைதி |

இதனடிப்படையில் மார்க்கத்தில் (மக்க) புத்தர் குறிப்பிட்ட எட்டு கட்டளைகளில் நான்காவது கட்டளையே "சம்மாகம்மந்த" எனும் 'நற்செயலாகும்'. இதனூடாக புத்தர் மனிதனை கவலைகளிலிருந்து நீங்கி ஏனைய சக மனிதனோடும் அன்போடும் இரக்கத்தோடும் வாழ வழிகாட்டுகிறார்.

இஸ்லாம் முழு அகிலத்திற்கும் அருளப்பட்ட சர்வதேச தன்மை கொண்ட மார்க்கமாகும். இஸ்லாம் என்பது புதிய மார்க்கம் அல்ல. ஆதி பிதா ஆதம் (அலை) தொட்டு நூஹ் (நோவா), சுலைமான் (சோலமன்), தாவூத் (தாவிது), இப்ராஹீம் (ஆப்ரஹாம்), மூஸா (மோஸஸ்), இஸ்ஹாக் (ஐஸக்), ஈஸா (ஜீஸஸ்) என அனைத்து நபிமார்கள் மூலமாகவும் பல்வேறு காலப்பகுதிகளில் மனித இனத்திற்கு நேர்வழி காட்டுவதற்காக அருளப்பட்ட மார்க்கமாகும். இது தொடர்பாக சூரா பகராவினுடைய 67 ஆவது வசனம்: ***"இப்ராஹீம் யூதராகவும் இருக்கவுமில்லை. கிறிஸ்தவராகவும் இருக்கவில்லை. எனினும் இறைவனுக்கு வழிபட்ட நேரான முஸ்லிமாகவே இருந்தார்"*** என இப்ராஹீம் நபி தொடர்பாக இறைமறுப்பாளர்கள் கேட்கப்பட்ட கேள்வியினூடாக இப்ராஹிம் நபி பின்பற்றிய மார்க்கம் இஸ்லாம் என்பதனை உறுதிப்படுத்துகிறது. அதேபோன்று மனிதனை நேர்வழிப் படுத்துவதற்காக வேண்டி காலத்திற்குக் காலம், நபிமார்கள் அனுப்பப்பட்டு நற்செயல்களை தெளிவுபடுத்தி நேர்வழிப்படுத்தியுள்ளது இஸ்லாம். இதுதவிர இஸ்லாம் தனது அனைத்து அடிப்படைக் கடமைகளின்வாயிலாகவும் மனிதனிற்கு ஒழுக்கத்தை போதிக்கும் மார்க்கமாகவே உள்ளது.

மேற்படி பௌத்த மற்றும் இஸ்லாத்தில் அடிப்படை கோட்பாடுகளில் சில வேறுபாடுகள் இருப்பினும் மனிதனை நேர்வழிப்படுத்தக்கூடிய ஒழுக்கம் தொடர்பான கோட்பாடுகளில் பல ஒற்றுமைகள் இருப்பதனை அவதானிக்க முடியும். அவ்வகையில் பௌத்த மற்றும் இஸ்லாமிய மார்க்கத்தை பின்பற்றுபவர்களுக்கிடயே நற்புறவையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் வகையில் பௌத்த ஆரிய அஷ்டாங்க மார்க்கங்களில் ஒன்றான 'சம்மாகம்மந்த' எனும் நற்செயல் இஸ்லாம் குறிப்பிடும் 'அமல் அத்-தய்யிபா"வுடன் தொடர்புபடுத்தி ஆய்வுசெய்யப்பட்டுள்ளது.

**1. ஆய்வு எல்லை**

பௌத்த எண் வகை மார்க்கங்கள் வரிவான விக்கங்களைக் கொண்டுள்ளன என்பதனால், ஆய்வின் விரிவஞ்சி இதனுடைய நான்காவது போதனையான *சம்மாகம்மந்த*வினை அமலுத்தய்யிபா என்ற இஸ்லாத்தின் போதனையோடு ஒப்பிட முயற்சிக்கின்றது. இது பௌத்த முஸ்லிம் பரஸ்பர புரிந்துணர்வை மையப்படுத்திய ஆய்வு என்பதனால், *சம்மாகம்மந்த* என்ற பௌத்த போதனை எவ்வாறு இஸ்லாமிய போதனைகளுடன் ஒத்துப் போகின்றது என்பதனை ஆய்வு வரையரையாகக் கொண்டுள்ளது.

**2. ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வு ஒப்பாய்வு அணுகுமுறை, விபரண விபரிப்பு அணுகுமுறை என்ற இரண்டு ஆய்வு முறைகளைக் கொண்டு பண்பு ரீதயாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்மா கம்மந்த மற்றும் அமல் அத்-தய்யிபாவுடன் கூடிய ஆய்வுத் தகவல்கள் திரட்டப்பட்டு ஒத்த அல்லது மாறுபட்ட விடயங்களை கண்டறிந்து, ஒப்பு நோக்கி இரண்டிற்கும் இடையிலான தனித்தன்மைகளைக் கண்டறிய ஒப்பாய்வு அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு இவ் ஒப்பீட்டினை சிறந்த முறையில் பொதுவியல்புக் கூறுகளையும், சிறப்பியல்புக் கூறுகளையும் இனம்பிரித்துக் காட்டி, இரு சமயங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் கொள்கை மற்றும் நம்பிக்கை ரீதியான வேறுபாடுகள், எதிர் மறைக் கருத்துக்கள் என்ற பகுதிக்குச் செல்லாது *சம்மாசங்கப்பம்* மற்றும் அந்நீயா தய்யிபா என்ற இரு போதனைகளதும் ஒற்றமைகளை விபரண விபரிப்பு முறை (descriptive method) மூலம் விபரித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2.1. தரவு மூலங்கள்:**

இவ் ஆய்வுக்குரிய தகவல்கள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன.

***2.1.1.*** **முதன்மைத் தரவகள்:**

பௌத்த - இஸ்லாமிய மார்க்க மூலக் கிரந்தங்களான முறையே தம்மபதம், பிடகங்கள் மற்றும் அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள் என்பன இவ் ஆய்வுக்குரிய முதன்மைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

***2.1.2.*** **இரண்டாம் நிலைத்தரவு மூலங்கள்:**

இவ் ஆய்வுக்குத் தேவையான இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாக, ஆய்வுகள், சஞ்சிகைகள், எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் என்பன இவ்வாய்வின் மூலங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக தமிழ், ஆங்கிலம், சிங்களம், பாளி, அரபு போன்ற மொழிகளிலுள்ள ஆக்கங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

## 3. பௌத்த *சம்மாகம்மந்த* மற்றும் இஸ்லாமிய *அமலுத் தய்யிபா*: நற்செயல் பற்றிய பௌத்த-இஸ்லாமிய கலந்துரையாடல்.

இவ் ஆய்வினுடைய பிரதான பகுதி பௌத்த ஆரிய அஷ்டாங்க மார்க்கத்தின் நான்காவது கட்டளையான *சம்மாகம்மந்த* வினை இஸ்லாமிய அமல் அத்-தய்யிபாவுடன் ஒப்பீட்டு அடிப்படையில் ஆய்வு செய்வதானால், இத்தலைப்பின் பிரதான இரு தலைப்புகளான சம்மாகம்மந்த மற்றும் அல்-அமல் அத்-தய்யிப் என்பன தனித்தனித் தலைப்புகளாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இறுதியாக இரண்டிற்குமிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை பற்றி கலந்துரையாடுகிறது.

### *3.1. பௌத்த "சம்மாகம்மந்த" எனும் நற்செயல்*

நற்செயல் என்பது பௌத்த ஆரிய அஷ்டாங்க மார்க்கத்தின் நான்காவது போதனையாகும். இது பாலி மொழியில் '*சம்மாகம்மந்த*' என அழைக்கபடுகின்றது. 'சரியான செயல் அல்ல

துநற்செயல்' என்பது ஆரோக்கியமற்ற செயல்களைத் தவிர்ப்பதாகும். மேலும் இது நல்லொழுக்கத்தையும், நற்பண்புகளையும் மனிதனில் வளர்க்கிறது. இந் நற்செயலினை கடைபிடிப்பதனூடாக மனிதன் நிருவானத்தை அடைய முடியும் என புத்தர் குறிப்பிட்டுள்ளார். உயிர்கலைக் கொல்லாதிருக்கவும், களவு செய்யாதிருக்கவும், நேர்மையற்ற விவகாரங்களில் ஈடுபடாமலும், தவறான பாலியல் நடத்தைகளில் ஈடுபடாமலிருக்கவும் இப்போதனை உதவும். நுற்செயலைக் கடைபிடிப்பதானது மற்றவர்களையும் நல்வழியில் நடக்கத் தூண்டும் (வல்பொல ராகுல, 1989, 54). புத்தர் நற்செயல்கள் கடைபிடிக்க வேண்டும் என்றும், தீய செயல்களிலிருந்தும் விலகி இருக்க வேண்டும் எனவும் போதித்துள்ளார். எனினும் ஆரிய அஷ்டாங்க மார்க்கத்தி உள்ள சம்மாகம்மந்தவில் பிரதானமாக மூன்று விடயங்களிலிருந்து தவிர்ந்து இருக்க வேண்டும் என போதித்துள்ளார். எனவே இவ் ஆய்வும் இவை தொடர்பாகவே விரிவாக அலசுகிறது. இதனைப் பற்றி தம்மபதம்

**"இந்த உடலை சினம்கொள்ள விடாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உடலினை கட்டுப்படுத்திக் கொண்டவராக இருக்க வேண்டும். உடலின் செய்யும் தீமையான செயல்களிலிருந்து (உயிர்களைக் கொல்லுதல், களவு எடுத்தல், தகாத காம செயலில் ஈடுபடுதல்) விடுபட்டு நன்மையானவற்றை செய்தல் வேண்டும்**. (*Dhammapadam: V*.231). என்று தெளிவாக கூறுகிறது.

மேலும், அனைத்து நல்ல தீய செயல்களுக்கும் மனமே அடிப்படையாக உள்ளது என தம்மபதம் குறிப்பிடுகிறது. அத்தோடு மனிதன் செய்யம் செயலினுடைய விளைவு அவனை பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கும்,

**ஆற்றும் அனைத்து பாவ புண்ணிய செயல்களுக்கும் மனமே அடிப்படையாக உள்ளது. மனமே முதன்மை பெறுகிறது. மனதாலேயே அனைத்தும் உருவாகிறது. ஒருவர் கொடிய உள்ளத்தைக் கொண்டு கொடிய வார்த்தைகள் பிரயோகிப்பாராயின், பாவச்செயல்கள் செய்வாராயின் அவரால் சேகரிக்கப்படும் அந்தப் பாவமானது எருதினைன பின் தொடர்ந்து வரும் வண்டியின் சக்கரத்தைப் போல் இடைவிடாது துன்பத்தினையே அளித்த வண்ணம் பின்தொடரும்**. இது ஜேதவனராமத்தில் சக்குபால தேரருக்காக போதிக்கப்பட்டதாகும் (*Dhammapadam: V*. 01).

இவ்வாறு மனிதன் செய்யக்கூடிய அனைத்துவிதமான பாவ, புண்ணியமான செயல்களுக்கும் மனம் காரணம் எனக் கூறுவதோடு மாத்திரமன்றி, உலகில் பிறந்தவர் குசலங்கள் அதாவது நற்செயல்கள் செய்பவராக இருக்க வேண்டும் என புத்தர் *Dhammapadam: V*. 53 எனும் உரையில் குறிப்பிட்டுள்ளார். **திறமையான பூக்காரன் அழகிய மலர்களை சேர்த்து பல அழகிய மலர்மாலைகளை கட்டுவதைப்போன்று மனித உலகில் பிறந்தவர் குசலங்களையே (நற்செயல்) சேர்த்துக்கொள்ள வேண்டும்.** சாவத்திய நகரின் போது விசாகா உபாசகியை முன்னிட்டு போதித்ததாகும்.

மேலும் பிரிதொரு செய்யுலில், **சந்தனம், துவரை, நீலோற்பலம், மல்லிகை எனும் மலர்களின் வாசனையை விட குணசீலமிக்கவர்களின் சீலத்தின் (ஒழுக்கம்) சுகந்தம் எத்தனை நறுமணம் உடையது?** இது சாவத்திய நகரின்போது ஆனந்த தேரரை முன்னிட்டு போதித்ததாகும் (*Dhammapadam: V*. 55).

இதனைத் தொடர்ந்து வரக்கூடிய வசனத்தில்: **"சந்தனம், துவரை மல்லிகை போன்ற மலர்களின் மனம் கொஞ்சமே ஆனால் நற்குணமுள்ளவர்களின் சீல சுகந்தம் இவற்றிலும் மேலானதாகும். அந்த சுகந்தம் தேவலோகம் வரை பரவிச்செல்லும்.** வேலுவனராமத்தில் மகா காசியப்ப தேரரை முன்னிட்டு போதித்ததாகும் (*Dhammapadam: V*. 56). இதனூடாக கௌத்தம புத்தர் மணக்கக்கூடிய மலர்கள், சந்தனங்களை விடவும் நற்குணமே மனிதனிற்கு சிறந்தது என்கிறார்.

பௌத்தம் நல்ல செயல்களை கடைபிடிக்குமாறு குறிப்பிடுவதோடு, தீய செயல்களை தடைசெய்கிறது. எனினும் ஆரிய அஷ்டாங்க மார்க்கத்தில் குறிப்பிடும் சம்மாகம்மத்தவினூடாக புத்தர் பிரதானமாக மூன்றுவிதமான செயல்களில் இருந்து விலகி இருக்குமாறு குறிப்பிடுகிறார்.

அவை, கொல்லாமை, கல்லாமை, காமமின்மை என்பனவாகும். இவை தொடர்பாக விரிவாக நோக்கமுடியும்.

### *3.1.1. கொல்லாமை - பாணாதிபாதா வெரமனி* (Phattharachai Uthaphun, 2017, 1-10).

புத்தபகவான் 'இவ்வுலகில் வாழும் உயிர்கள் உடலினால் மூன்று வகையான பாவங்களை புரிகின்றனர்' எனக் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் முதலாவது *'பாணாதிபாதா'* என்னும் உயிர்களைக் கொல்லாமை, இரண்டாவது களவு எடுத்தல், மூன்றாவது தகாத காம செயல்களில் ஈடுபடாமல் தவிர்ந்து வாழ்தல் எனக் குறிப்பிட்டுகின்றார். கொல்லாமை எனும் கட்டளையானது, உயிரினங்களை கொலை செய்யக் கூடாது என்பதனையே வழியுறுத்துகிறது.

மேலும் விபரிப்பதாயின், இக் கட்டளையினூடாக உயிரினங்கள் வாழ்க்கையை நேசிக்கின்றன்: மரணத்தை அஞ்சுகின்றன: மனிதன் மகிழ்ச்சியை நாடுகிறான் மற்றும் வலியை வெறுக்கிறான் என்பதோடு, இக்கோட்பாட்டின் அடிப்படையில் உயிரினங்கள் மீது அன்பாகவும் கருணையாகவும் நடக்க வேண்டும்: எந்த ஓர் உயிரையும் கொலை செய்யக் கூடாது என்பதனை அடிப்படையாக கொண்டுள்ளது என பர்பரா ஓ பரீன் (2018) தனது ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

பௌத்தம் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே உலகில் உள்ள உயிர்களை துன்புறுத்துபவனுக்கு மறுபிறப்பில் நலவு ஏற்படாது என தம்மபதம் ஈண்டு குறிப்பிடுகின்றது. **'அனைத்து உயிர்களும் சுகமாக வாழ்வதற்கே விரும்புகின்றன. ஒருவன் தன்னுடைய சுகத்திற்காக ஏனைய உயிர்களை அடித்து, துன்புறுத்தி இம்சிப்பாராயின் அவர் பரலோகத்தில் சுகத்தினை அடைய மாட்டார்.- ஜேதவனராமத்தில் சில சிறுவர்களுக்காக போதிக்கப்பட்டது** (*Dhammapadam: V* .131).

மேலும், **"எல்லோரும் தண்டத்துக்கு (தண்டனைக்கு) நடுங்குகின்றனர். எல்லாருக்கும் உயிர்வாழ்வு உவப்புக்குரியதே! தன்னை உவமையாக்கி ஒருவனும் கொல்லவும் கொல்விக்கவும் கூடாது."** - இது ஜேதவனராமத்தில் சப்பக்கிய தேரர்களுக்காக மொழிந்தது (*Dhammapadam: V* 129). எனும் உரையினூடாக எல்லா உயிரினமும் தண்டனைக்கு நடுங்குகின்றன, இவ்வுலகில் உயரி வாழ்வதற்கே விருப்பம் கொள்கின்றன. எனவே இவ்வாறான உயிர்கள் மீது அன்பாக இருக்க வேண்டும் என புத்தர் போதித்துள்ளார்.

சுருக்கமாக குறிப்பிடுவதென்றால் இக்கொள்கை உயிர்களின் அன்பையும், கருணையையும் வளர்க்க வேண்டுமென குறிப்பிடுகிறது. மேலும், மனிதன் இக்கொள்கையை பின்பற்றுகின்ற பொழுது பௌத்தம் குறிப்பிடும் நற்செயல் எனும் 'சம்மாகம்மந்தவை' நிறைவேற்றியவானாக அடையாளப்படுத்தப்படுகிறான்.

### *3.1.2. கல்லாமை - "ஆதிந்நாதனா வெரமனி*

சம்மாகம்மந்த கடைபிடிக்குமாறு குறிப்பிடும் இரண்டாவது நற்செயல் கல்லாமை ஆகும். இக் கட்டளை பாலி மொழியில் "அதிந்நாதனா வெரமனி" என்று அழைக்கப்படுகிறது. 'அதின்னா' என்ற சொல்லுக்கு 'கொடுக்கப்படாதது' என்றும், 'அதனா' என்ற சொல்லுக்கு 'எடுத்துக்கொள்வது' என்றும் பொருள்.

இக் கட்டளையின் படி தனக்கு சொந்தமில்லாத எதனை எடுத்தாலும் அது திருட்டாகவே அமையும். திருடும் வகைகளாக பின்வருவனவற்றை குறிப்பிட முடியும் என Bhodi (1984, 52). குறிப்பிடுகிறார்.

1. திருடுதல்: வீடு உடைத்தல், பிக்பாக்கெட் போன்ற மற்றவர்களின் உடமைகளை இரகசியமாக எடுத்துக்கொள்வது
2. கொள்ளை: மற்றவர்களுக்கு சொந்தமானதை வெளிப்படையாகவோ அல்லது அச்சுறுத்தலாகவோ எடுத்துக்கொள்வது

3. பறித்தல்: மற்றொருவருக்கு எதிர்ப்பதற்கு நேரம் கிடைக்கும் முன் திடீரென அவனுடைய உடைமைகளை பறித்தல்.
4. மோசடி: மற்றவர்களின் உடைமைகளை ஒருவரின் சொந்தம் என்று பொய்யாக கூறி அவற்றை உடைமை செய்வது
5. வஞ்சகம் அல்லது ஏமாற்றுதல்: வாடிக்கையாளர்களை ஏமாற்ற தவறான எடைகள் மற்றும் அளவீடுகளைப் பயன்படுத்துதல்.

கல்லாமை தொடர்பாக தம்மபதம்

> *"யோத தீகங் வ ரஸ்ஸங் வா*
> *அணுங் தூலங் ஸுபாஸுபங்*
> *லோகே அதின்னங் நாதியதி*
> *தமஹங் ப்ரூமி ப்ராஹ்மணங்"*

**"உலகில் தனக்குக் கொடுக்கப் படாத பொருள் நீண்டது, குறுகியது, சிறியது, பெரியது, நல்லது, கெட்டது, எதுவாயினும் அதனை ஏற்றுக் கொள்ளாதவன் எவனோ, வனை நான் அந்தணன் என்பேன்"** (*Dhammapadam: V.* 409). எனும் செய்யுலினூடாக எப்பொருளாக, அதன் பெறுமதி எந்தளவாக இருந்தாலும் அதனை உடைமையாக்குவது நல்ல செயல் அல்ல என்பதனை தெளிவுபடுத்துகிறது.

அதேபோன்று, பௌத்தத்த கிரந்தத்தில் குறிப்பிடும் திருடுவதற்கான ஆறு வழிகள் பின்வருமாறு:

a) ஒருவர் தனது சொந்தக் கைகளால் திருடுவது
b) தவறான அளவீடு மற்றும் எடை மூலம் திருடுவது
c) பலத்தால் திருடுவது
d) மறைத்து திருடுதல்
e) வடிவமைப்பு மூலம் திருடுதல்
f) மோசடி மூலம் திருடுவது (Tiwari, 1989).

இக்கட்டளையினை பிரிதொரு தம்மபத செய்யுலினூடாகவும் விளங்கிக் கொள்ள முடியும்.

> "மனோபகோபங் ரக்கெய்ய
> மனசா சங்வுதோ சியா
> மனோதுச்சரிதங் ஹித்வா
> மனசா சுசரிதங் சரே"

**"இந்த மனதினை சினங்கொள்ளவிடாது பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மனதினைக் கட்டுப்படுத்திக் கொண்டவராக இருக்க வேண்டும். மனதினால் செய்யும் தீமைகளில் இருந்து (பிறர் உடைமைகளின் மீது ஆசை கொள்ளுதல், கோபம், பிழையான பார்வை) விடுபட்டு நன்மையானவற்றில் மனதை ஈடுபடுத்த வேண்டும்" (***Dhammapada*, v. 233).

சுருக்கமாக கூறுவதாயின் இக்கட்டளையினை நிறைவேற்றுவதனூடாக சக மனிதனுடைய உடைமைகள் பாதுகாக்கப்படும்.

### *3.1.3.* காமமின்மை – ***காமேசு மிச்சாகரா வெரமனி***

சம்மாகம்மந்த குறிப்பிடும் மூன்றாவது நற்செயலே ஒரு மனிதன் தவறான உறவில் ஈடுபடாமல் தனது வாழ்வைக் கழிப்பதாகும். பாலி மொழியில் இந்தக் கட்டளையானது 'காமேசு மிச்சகரா வெரமனி' என்று அழைக்கப்படுகின்றது. காமா என்றால் 'ஆண்' அல்லது 'பெண்' மீதான காம ஈர்ப்பு என்று அழைக்கப்படுகின்றது. மிச்சாகரா வெரமனி என்றால் 'தவறான நடத்தை' என்று பொருள்படும்.

புத்த பகவான் துக்கத்திற்குக் காரணம் 'தன்ஹா' எனப்படும் ஆசை என குறிப்பிடுவதோடு, அவற்றை மூன்று வகையாக வகுத்துக் கூறியுள்ளார். அவை: காம தன்ஹா, பவ தன்ஹா, விபவ தன்ஹா என்பனவாகும். 'காம தன்ஹா' என்றால் உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வுகள் என்பவற்றின் மீதான ஆசையாகும். 'பவ தன்ஹா' என்றால் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கான ஆசையாகும். 'விபவ தண்ஹா' என்றால் பிறவாமலிருப்பதற்கான ஆசையாகும் (ஞானானந்த தேரர், 2018: 33). இவற்றில் தவறான பாலியல் மீதான ஆசையை முதலில் குறிப்பிடுவதனூடாக மனிதனின் இவ்வுலக துன்பத்திற்கான பிரதான காரணம் ''காமம்'' என்பது புலனாகிறது.

ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்தைத் தவிர்த்து, அதிலிருந்து விலகி இருக்க வேண்டும். ஒருவருக்கு தனது தந்தை, தாய், சகோதரன், சகோதரி அல்லது உறவினர்கள், திருமணமான பெண்கள், பெண் கைதிகள், நிச்சயிக்கப்பட்ட பெண்கள் அல்லது தனது பாதுகாப்பில் இருக்கும் நபர்களுடன் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது (கிரிபத்கொடை ஞானானந்த தேரர், 2020, 10). இவ்வாறு காம செயலில் ஈடுபடுபவர்களை மாறன் விரைவாக வீழ்த்திவிடுவான் என்கிறது, இது தொடர்பாக தம்மபதம்,

**'திறமையான பூக்காரன் மலர்களை பறிப்தற்காக ஒவ்வொரு செடிகளை நோக்கிச் செல்வதைப் போன்று இந்தக் காம சுகத்தில் ஒட்டிக் கொண்டவரும் காமத்தினையே தேடிக்கொண்டு போவார். மக்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது வெள்ளப்பெருக்கு வந்து அவர்களை கடலுக்கு அடித்துச் செல்வதைப் போன்று மாரனால் அவர்கள் நரகத்திற்கே இழுத்துச் செல்லப்படுவார்கள்'** *(Dhammapadam: V.* 47). என குறிப்பிடுகிறது.

மேலும், இவ்வாறு காம சுகத்திற்கு பழக்கப்பட்டவரை தம்மபதம் போதைக்கு ஒப்பானவனைப் போன்று அவன் அச்சுகத்திற்காக அழைவான் என்பதனை பூக்காரனோடு உவமிட்டுக் குறிப்பிடுகின்றது.

**'பூக்காரன் பூக்களை தேடித்தேடி ஊர் ஊராக செல்வதைப்போன்று இந்தக் காமத்தில் ஒட்டிக்கொண்டு இருப்பவன் காம சுகத்தினையே தேடியலைவான். அந்த காமத்தினால் எவ்வித திருப்தியையும் அடையாமலே இறுதியில் அவன் மாரனது பிடிக்குள் அகப்பட்டுக் கொள்வான்'** (*Dhammapada: V.* 48). மயக்கநிலை என்பது ஒருவனுக்கு போதையினால் மாத்திரம் வருவதல்ல, இத்தவறான காமத்தில் நுழைந்தவனும் ஒருவித மயக்கத்திலே இருப்பான். எனவே இச்செயலின் பக்கம் நெருங்க வேண்டாம் என புத்தர் கூறியுள்ளார். **''மயக்கத்தில் நுழைய வேண்டாம். காம இன்பங்களை நாடி அணுக வேண்டாம். தெளிவோடும் உறுதியோடும் தியானம் செய்பவன் எல்லையற்ற இன்பத்தை அடைகிறார்''** (*Dhammapada: V.* 27). எல்லையற்ற இன்பம் என்பது தியானத்தினூடாகவே உள்ளதே தவிர காம சுகத்தில் இல்லை என்பதனையும் இச்செய்யுலினூடாக புத்தர் குறிப்பிடுகிறார்.

இத்தவறான காம நடத்தையில் ஈடுபடாமல் இருப்பதற்காகவே பிரம்மச்சரியமான வழிமுறையை கடைபிடிக்குமாறு கூறுகிறது.

புத்த பகவான் மான்களின் சரணாலத்தில் இருந்த 'ஐ'வகை தவசிகளுக்கும் பின்வருமாறு போதனை செய்தார். *'த்வே மே பிக்கவே அன்தா பப்பஜிதேன ந சேவிதப்பா'* – ''பிக்குகளே! துறவிகள் பின்பற்றக் கூடாத இரு அந்தங்கள் உண்டு. துறவு பூண்டேர் இவ்விரு அந்தங்களையும் பழக்கப்படுத்தக் கூடாது. முதலாவது அந்தம், '*யோசாயங் காமேசு காமசுகல்லிகானுயோகோ'* அதாவது துறவிகள் காம சுகத்தில் பற்றுடையவராக காம சுகத்தில் திளைத்து வாழ வேண்டாம். அவ்வாறு வாழ்வாராயின் அது *'ஹீனோ'* – மிக மிக கீழ்த்தரமான விடயமாகும். *'கம்மோ'* - இழிவானதாகும். *'போதுஜ்ஜனிகோ'*

ஞானமுள்ளோரால் பாராட்டப்படாததாகும். *'அனத்தசங்ஹிதே'* – பயனற்றதாகும் என்றார் (சம்யுக்த நிகாயம், பாகம் 5- தம்ம சக்க பவத்தன சூத்திரம்).

அனைவருக்கும் துறவறத்தை பௌத்தம் நிர்ப்பந்திக்கவில்லை. சாதாரண மக்களுக்கு திருமணத்தை ஆதரிக்கிறது. **"புண்ணியம் செய்ய விரைந்து செல்க. பாவத்தினின்று மனத்தை விலக்குக. புண்ணியம் செய்யப் பின் வாங்கினால், மனம் பாவத்தில் இன்பம் காண்கிறது."** இங்கு புண்ணியம் என்று திருமணத்தையே புத்தர் குறிப்பிட்டுள்ளார் (*Dhammapada*, v. 116).

இவை மாத்திரமன்றி, ஒரு ஆண் மூன்றுவிதமான பெண்களிடம் தவறான நடத்தையில் ஈடுபட முடியாது. அவர்கள் (Bhodi, 1984, 54).

1. இன்னொருவருடைய மனைவி: இது தொடர்பாக தம்மபதம் இவ்வாறு கூறுகிறது,

   "சத்தாரி டானானி நசெவரோ பமத்தோ
   ஆபஜ்ஜதி பரதாரூப சேவீ
   அபுஞ்ஞலாபங் ந நிகாமசெய்யங்
   நித்தங் ததியங் நிரயங் சதுத்தங்"

   **"ஏனையோரின் பெண்களுடன் உறவு கொள்ளும் தாமதமிக்க மனதின் நான்கு வகையான தொல்லைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். முதலாவதாக அவனை நோக்கி பாவம் வந்து சேரும். மனத்தடுமாற்றம் காரணமாக இன்பமாக இருக்க முடியாது, மூன்றாவதாக ஏனையோரின் நிந்தனைகளுக்கு ஆளாக நேரிடும். நான்காவதாக அந்தப் பாவி நரகத்திலேயே பிறக்க நேரிடும்." -** இது சாவத்திய நகரில் கேம எனும் சீமானை முன்னிட்டு போதித்ததாகும் (*Dhammapada: V.* 309).

2. ஒருவருடைய பாதுகாப்பில் இருக்கக்கூடிய பெண்: தாய், தந்தை, உறவினர்கள் அல்லது பாதுகாவலர்களாக இருக்கக்கூடியவர்களை குறிப்பிடுகிறது. இவ்வாறு பாதுகாப்பில் இருக்கக்கூடிய பெண்களை அனுமதியின்றி இரகசியமாக திருமணம் முடிக்க முடியாது
3. கண்ணியஸ்திரிகள் அல்லது பிரம்மச்சரிய வாழ்வில் ஈடுபட்டுள்ள பெண்கள்.

மேலும் ஒரு பெண்ணிற்கு இரண்டு விதமான ஆண்கள் விலக்கப்பட்டவர்களாவர் என பிக்கு போதி குறிப்பிடுகிறார்.

1. திருமணமான பெண்ணுக்கு கணவனைத் தவிர மற்றைய ஆண்கள் தடுக்கப்பட்டவர்கள்
   ஒரு திருமணமான பெண் தன் கணவனிற்கு துரோகம் இழைத்தால், பௌத்த விதிமுறையை மீறியவளாவாள். ஆனால் ஒரு விதவை அல்லது விவாகரத்து பெற்றவள் மறுமணம் செய்து கொள்ள பௌத்தத்தில் அனுமதி உள்ளது.
2. நெருங்கிய உறவினர் மற்றும் பிரம்மச்சரியத்தியத்தில் ஈடுபட்டிருக்கும் ஆண்கள் (Bhodi, 1984, 54).

கொல்லாமை, கல்லாமை, காமமின்மை போன்ற தீய செயல்களிலிருந்து ஒருவன் தவிர்ந்து தனது வாழ்க்கையில் கொலை செய்யாது, பொய் சொல்லாது, காம இன்பங்களில் நுழையாமலும் நற் செயல்களில் ஈடுபடும்போது அவன் அஷ்டாங்க மார்க்கத்தின் நான்காவது கட்டளையான சம்மாகம்மந்தவினை கடைபிடித்தவராகிறார்.

### *3.2. அமலுத் தய்யிபா: இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் நற்செயல்*

இஸ்லாம் மார்க்கமானது தீன், துன்யா என பிரிக்காமலும், சமூக வாழ்வு ஆன்மீக வாழ்வு என வேறுபடுத்திக் காட்டாமலும் ஒருங்கிணைத்தாக நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பது, "மார்க்கம்

என்பது மனிதனின் அனைத்து காரியங்களையும் (செயல்களையும்) சீர்படுத்தவே அருளப்பட்டது'' என்பதை உறுதிப்படுத்துகிறது. நேரிய வழியை விளங்கிய முஸ்லிமின் பார்வையில், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை மட்டுமே நோக்கமாக கொண்டு செயல்படும் அனைத்து செயல்களும் இறைவணக்கம் (இபாதத்) ஆகும்.

இறையச்சமுள்ள முஸ்லிமுக்கு முன்னால் நன்மையின் அனைத்து வாசல்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அல்லாஹ்வின் மகத்தான அருட்கொடைகளையும் அல்லாஹ்வின் விசாலமான கருணையையும் வேண்டி, விரும்பிய போதெல்லாம் நன்மையை அடைந்துகொள்வார். அதேபோன்று மனிதர்களுக்கு நல்வழியை காண்பிப்பதற்காக வேண்டியே காலத்திற்குக் காலம் நபிமார்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இஸ்லாம் '**மனித வாழ்க்கை முழுவதும் இபாதத்**' (இறைவணக்கம்) என்ற அடிப்படையில் அமைய வேண்டும் என கூறுகிறது. இவ் ''இபாதத்'' (இறைவணக்கம்) என்பதற்கு அகராதியில் இரண்டு கருத்துகள் உள்ளன: *தொழுதல், குர்ஆன் ஓதுதல், திக்ர் செய்தல்* போன்றனவற்றை (குறிப்பாக நோக்கப்படும்) முதலாவது வகைக்கு உதாரணமாகக் கூறலாம். இபாதத்தின் இரண்டாவது வகையான அகராதிக் கருத்தாக: *நமது வாழ்வின் சகல கட்டங்களிலும், சகல நிலைமைகளிலும் அல்லாஹ்வின் ஏவல்களை முற்றாக எடுத்தும் விலக்கல்களை முற்றாகத் தவிர்ந்தும் வாழ்வதே* ''இபாதத்'' என்பதன் (பொதுவாக - விரிவாக நோக்கப்படும்) கருத்தாகும். இதனை இன்னொரு வழியில் சொன்னால், அல்லாஹ்வின் ஏவல்களை முற்றாக எடுத்தும் விலக்கல்களை முற்றாகத் தவிர்ந்தும் வாழ்வதனை **"ஸாலிஹான அமல்கள்**'' (நற் செயல்கள்) என்றும் கூறலாம்.

இறைவன் மனிதனைப் படைத்ததன் நோக்கம், அவனை வணங்கி வழிபடுவதற்காகும். இது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். **"இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை இபாதத் செய்வதற்காகவே (வணங்கி - வழிபடுவதற்காகவே) அன்றி நான் படைக்கவில்லை" (**சூரா அத்தாரியத்:: வசனம் 56).

மேலும், **விசுவாசிகளே! நீங்கள் குனிந்து சிரம்பணிந்து உங்கள் இறைவனை வணங்குங்கள். நன்மையே செய்து கொண்டிருங்கள். அதனால் நீங்கள் வெற்றி அடையலாம்** (சூரா அல் ஹஜ்: வசனம் 77) என்கிறது அல்குர்ஆன். அல்லாஹ்வை ''இபாதத் செய்தல் (வணங்கி - வழிபடுதல்) - என்கின்ற பொழுது அது நாம் மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு வகையான அகராதிக் கருத்துக்களையும் தம்முள் கொண்டுள்ளது என்பது புரிகிறது. அதேபோன்று அல்குர்ஆனில் நற்செயல் என்பது தனித்து என்பது தடவைகளும், சேர்ந்து ஏழு தடவைகயும் இடம்பெற்றுள்ளன.

பிரிதொரு வகையில் கூறுவதாயின், நபிவழியில் (சுன்னாவின் படி) செய்யப்படும் செயல்களே ஸாலிஹான அமல்கள் (நற் செயல்கள்) எனப்படும். நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம், குணநலன், பண்புகள் அனைத்தையும் மொத்தமாக – ''நபிவழி (சுன்னா)''என அழைக்கப்படும்.

''சுன்னா'' எனும் பதம் மார்க்க வழக்கில் இரு வேறுபட்ட அம்சங்களுக்குப் பிரயோகிக்கப்படுகிறது. அவையாவன: (ஆசிர், 2017).

1. நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம், குணநலன், பண்புகள் அனைத்தையும் மொத்தமாக - நபிவழி (சுன்னா)'' என அழைக்கப்படும்.
2. செயல்களின் (அமல்களின்) தரங்களை சட்ட அறிஞர்கள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். **பர்ளு** (கட்டாயமாக்கப்பட்டது) - செய்தால் நன்மை செய்யாவிட்டால் பாவம், **சுன்னா** (ஆர்வமூட்டப்பட்டது) - செய்தால் நன்மை செய்யாவிட்டால் பாவம் இல்லை., **முபாஹ்** (அனுமதிக்கப்பட்டது) - செய்தால் நன்மையும் இல்லை செய்யாவிட்டால் பாவமும் இல்லை, **மக்ரூஹ்** (வெறுக்கப்பட்டது) - செய்தால் பாவம் இல்லை செய்யாவிட்டால் நன்மை, **ஹராம்** (தடை செய்யப்பட்டது) - செய்தால் பாவம் செய்யாவிட்டால் நன்மை என்பனவாகும்.

இதனையே அல்குர்ஆன், "**மேலும், (நம்) தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள். இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்**" (59: வசனம் 7) என விபரிக்கிறது.

நற்செயலுடையவர் தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு மொழிகிறார்: நல்லவர் யார் எனில்: "எவருடைய தீமையிலிருந்து அச்சமற்று அவரது நன்மையின் மீது ஆதரவு வைக்கப்படுகிறதோ அவரே சமூகத்தில் சிறந்தவர்" என நபி (ஸல்) அவர்கள் நிர்ணயித்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள், அமர்ந்து கொண்டிருந்த சில மனிதர்களருகே நின்று "நான் உங்களில் தீயவர்களிலிருந்து உங்களில் நல்லவர்களைப் பற்றி அறிவித்துத்தரட்டுமா?" என்றார்கள். கூட்டத்தினர் மௌனமாக இருந்தனர். நபி (ஸல்) அவர்கள் மூன்றுமுறை அவ்வாறு கேட்டார்கள். அப்போது கூட்டத்திலிருந்த ஒருவர் "அல்லாஹவின் தூதரே! அறிவித்துத் தாருங்கள்" என்றார். நபி (ஸல்) அவர்கள் "எவரின் நன்மை ஆதரவு வைக்கப்பட்டு அவரது தீமையிலிருந்து மக்கள் அச்சமற்று இருக்கிறார்களோ அவரே உங்களில் சிறந்தவர். உங்களில் எவரிடமிருந்து நன்மை நாடப்பட்டு, ஆனால் தீமையிலிருந்து மக்கள் நிம்மதி அடையவில்லையோ அவரே உங்களில் மிகக் கெட்டவர்" (நபிவழி முஸ்னத் அஹ்மத்) என்று கூறினார்கள்.

இதனடிப்படையில், **நல்லமல்கள்** அல்லது நற்செயல் என்பது: இறைவனின் கட்டளைப்படியும், நபி (ஸல்) அவரகள் செய்யும்படி கட்டளையிட்டுள்ள அனைத்து செயல்களும் நற்செயல்களாகும். உதாரணமாக, உண்மை பேசுதல், பெற்றோரை மதித்தல், அவர்களுக்கு மரியாதை செலுத்துதல், மக்களுக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய பொருட்களை அகற்றுதல் என்பவற்றை குறிப்பிட முடியும்.

**தீய செயல்கள்** என்பது: அல்லாஹ்வும் நபி (ஸல்) அவர்களும் தடைசெய்த செயல்கள் அனைத்தும் தீய செயல்களாகும். உதாரணமாக: பொய் பேசுதல், மது அருந்துதல், வேண்டுமென்று கொலை செய்தல், தவறான முறையில் உறவு வைத்தல், பெற்றோரை அவமதித்தல், இணைவைத்தல் என தனக்கும், தன் சகோதரனிற்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய விடயங்களை அடையாளப்படுத்த முடியும்.

இஸ்லாம் நற்செயல்களோடு இணைத்து இறை நம்பிக்கையையும் இணைத்து அல்குர்ஆனில் பல இடங்களில் பேசுகிறது. அதாவது இறை நம்பிக்கையாளர்களின் காணப்படக்கூடிய பிரதான பண்பாக நற்செயலை அது குறிக்கிறது. உதாரணமாக கீழ்வரும் வசனங்ககளை நோக்க முடியும்.

> **"…..எவர் அல்லாஹ்வின் மீதும் இருதிநாளின் மீதும் நம்பிக்கை கொண்டு நல்லறம் செய்கிறார்களோ, அவர்களின் நற்கூலி நிச்சியமாக அவர்களின் இறைவனிடம் உண்டு"** (அல்குர்ஆன் சூரா பகரா: வசனம் 62).
>
> மேலும், "**ஆனால் எவர்கள் பாவமன்னிப்புக்கோரி நம்பிக்கை கொண்டு நற்செயலை செய்தாரோ அவர் வெற்றியாளர்களில் உள்ளவராகிவிடலாம்**" (சூரா அல் கஸஸ்: வசனம் 67).
>
> **"எவன் தன் இறைவனை சந்திக்கலாமென ஆதரவு வைக்கிறானோ அவன் நற்செயலை செய்து கொள்ளட்டும்"** (சூரா அல் க.்.பு: வசனம் 110).
>
> **"எவர் நற்செயலை செய்கிறாரோ அது அவருக்கே நன்மையாகும். யார் தீமையைச் செய்கிறாரோ அது அவருக்கே தீமையாகும். பின்னர் நீங்கள் உங்கள் இறைவனிடமே மீட்டப்படுவீர்கள்"** (சூரா ஜாஸியா: வசனம் 15). இவை இறை நம்பிக்கையுடன் நற்செயலானது மிக நெருக்கமாகவுள்ளதை தெளிவுபடுத்துகின்றன. இறைநம்பிக்கையோடு இணைந்தபடியே இஸ்லாம் தமது செயல்களை மேற்கொள்ளும்படி குறிப்பிடுகிறது.

இஸ்லாம் இறை நம்பிக்கையோடு சேர்த்து மனித மற்றும் ஏனைய படைப்பினங்களுக்கு மேற்கொள்கின்ற அனைத்து நற்செயல்களையும் ஆதரிக்கின்றன. இதில் பௌத்தம் சம்மாகம்மந்தவில் குறிப்பிடும் கொல்லாமை, கல்லாமை, தவறான பாலியலில் ஈடுபடாமை என்பனவும் இடம்பெற்றுள்ளன. இவை ஒவ்வொன்றையும் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் நோக்குவோமாயின்,

### *3.2.1. கொல்லாமை – ஹிப்ஸ் அன்-நப்ஸ்*

இஸ்லாம் மனிதனை, ஏனைய உயிரினங்களோடு நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு பணிக்கிறது. இவ்வாறு நல்ல முறையில் நடந்துகொள்வது வணக்கமாகவும் நோக்கப்படுகின்றது.. இது பற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் **"பூமியில் உள்ளவை மீது அன்பு காட்டுங்கள். வானத்தில் உள்ளவன் உங்கள் மீது அன்பு காட்டுவான்"** (திர்மிதி) பிரஸ்தாபித்துள்ளார்கள்.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஹிப்ஸ் அன்-நப்ஸ் (கொல்லாமை) என்பது, இறைவனின் படைப்பினங்களில் எதையேனும் ஒன்றை வேண்டும் என்றே கொலை செய்யாமலிருப்பதனை மையமாகக் கொண்டுள்ளது. இதில் மனிதன், விலங்குகள், தாவரங்கள் என்ற வேறுபாட்டிற்கு இடமில்லை. **"படைப்புக்கள் அல்லாஹ்வின் குடும்பமாகும். அவனுக்கு மிகவும் விருப்பமானவர்கள் அவனது குடும்பத்திற்கு பயனளிப்பவர்களே!**" (புகாரி) என்று நபி (ஸல்) அவர்களின் போதனையும் படைபினங்கள் அனைத்தும் ஒன்றே இறைவனின் கண்ணோட்டத்தில் ஒன்று என்பதாகும்.

மேலும், இக்கட்டளையின் படி இறைவன் விதித்த வரையரையிற்குள்ளே மனிதன் இயங்க வேண்டும். இதற்கு மாற்றமாக அநியாயமான முறையில் எடுக்கப்படும் ஒவ்வொரும் உயிரினத்தின் அபயக்குரலிற்கும் அம்மனிதன் இவ்வுலகிலும், நாளை மறுமையிலும் தண்டனையை எதிர் நோக்குவான். இது தொடர்பாக நாம் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு மனிதன், விலங்குகள் மற்றும் தாவரங்களை வேண்டுமென்றே அநியாயமாக அழிப்பதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை தனித்தனியாக நோக்குவோம்

**மனிதர்கள்** மத்தியில் இஸ்லாம் 'மனிதம்' என்கின்ற உயர் பண்பை காண்பதற்கே விளைகின்றது. மேலும் இறைவன் அல்குர்ஆனின் சூரா பகராவின் 30ஆவது வசனத்தில் மனிதனை இறைவனது 'பிரதிநிதி' என்ற உயர் அந்தஸ்திற்கு உயர்த்தி பேசுகிறான். இவ்வாறு கண்ணியமிகுந்த மனிதனை கொலை செய்வதானது முழு சமூகத்தையும் அழித்ததற்கு சமம் என்று அல்குர்ஆன் ஈண்று குறிப்பிடுகின்றது. **"நிச்சயமாக எவரொருவர் கொலைக்குப் பதிலாகவோ, அல்லது பூமியில் எற்படும் குழப்பத்தைத் தவிர்ப்பதற்காகவோ அன்றி மற்றொருவரைக் கொலை செய்கிறாரோ அவர் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவர் போலாவார்**" இதே வசனத்தில் தொடர்ச்சியாக ஒரு ஆத்மாவை வாழ வைத்தவர் மக்கள் அனைவரையும் வதழவைத்தவர் என கூறுவதன் ஊடாக உயிரிற்கான உயரிய மதிப்பினை சுட்டிக்காட்டுகிறது. **"மேலும் எவரொருவர் அதனை (ஓர் ஆத்மாவை) வாழவைக்கறாரோ, அவர் மக்கள் யாவரையும் வாழவைத்தோரைப் போலாவார்…"** (சூரா அல் மாயிதா: வசனம் 32).

இது மாத்திரமன்றி, பிரிதொரு அத்தியாயத்தில் **"எவனேனும் ஒருவன் ஒரு முஃமினை வேண்டுமென்றே கொலை செய்வானாயின் அவனுக்குரிய தண்டனை நரகமேயாகும்.**" என அநியாயமான கொலைக்குரிய தண்டனையை குறிப்பிட்டு எச்சரிக்கிறது (சூரா அன்னிஸா: வசனம் 93). இவற்றினூடாக எந்தளவு தூரம் இஸ்லாம் மனிதனை, மனித உயிரை கண்ணியப்படுத்துகின்றது என்பது புலனாகிறது.

இவ்வுயிரினங்கள் எனும் பட்டியலில் நாம் விலங்களை எடுத்து நோக்கினாலும் இஸ்லாம் விலங்குகள் மத்தியிலும் நல்ல முறையிலே நடந்து கொள்ள வேண்டும் என்றே கட்டளையிடுகின்றது. விலங்குகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்கின்ற மனிதரோடு

அல்லாஹ் இரக்கம் காட்டுகின்றான் என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவை மாத்திரமன்றி தாகித்த நிலையிலிருந்த நாயிற்கு நீர் புகட்டியதால் அவன் சுவர்க்கம் நுழைவான் என இலகுவான முறையில் சுவர்க்கத்தை அடையும் வழியைக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்ததாக இஸ்லாம் குறிப்பிடும் மிக முக்கியமான ஒரு உயிரினம் 'தாவரங்கள்' ஆகும். தாவரங்களையும் வேண்டுமென்றே கொலை செய்வதனை இஸ்லாம் தடை செய்துள்ளது. தாவரங்களும் அல்லாஹ்வின் அருள் என்பதனையே இவ் அத்தியாயம் தெளிவுபடுத்துகின்றன.

இது மாத்திரமன்றி நன்மைகளை அள்ளித்தரும் பெறுமதிமிக்க செயல்கள் என்ற அடிப்படையில் தாவரங்களையோ, பயிர்ப் பச்சைகளையோ, அநியாயமான முறையில் அழிக்க வேண்டாமென்றும் மாறாக பூமியில் அவற்றை நட்டுவதன் மூலம் நல்ல காரியங்களைப் புரியலாம் எனவும் இஸ்லாம் மனிதனைப் பணிக்கிறது. இஸ்லாமிய வரலாற்றில் முதலாவது கலீபா தனது படையை யுத்தத்திற்கு அனுப்பிய போது "காய்க்கும் மரங்களை வெட்டாதீர்கள். மக்கள் வாழும் பிரதேசங்களைத் தாக்கியழிக்காதீர்கள், உணவுக்காக அன்றி ஆடுகளையோ, ஒட்டகங்களையோ அறுக்காதீர்கள். தீயிட்டு தேனீக்களை எரிக்காதீர்கள்" என தனது படையை எச்சரித்தார்கள் (அய்யூப், 2020). மேலும், "உங்களில் ஒருவரின் கையில் ஒரு பயிர் இருக்கும் நிலையில் மறுமை வரப் போகிறது அப்பயிரை நட்டி விட முன்னால் மறுமை வந்து விடுமோ என்ற நிலை காணப்படினும் அதனை நட்டி விடுங்கள்" என்று நபியவர்கள் கூறியதாக அனஸ் (ரழி) அறிவிக்கிறார்கள்.

### *3.2.2. கல்லாமை*

திருட்டு அல்லது கல்லாமை என்பது தடுக்கப்பட்ட பாவமான செயல்களில் ஒன்றாக நோக்கப்படுகின்றது. அதேபோன்று இஸ்லாம் எது திருட்டு, எவ்வகையான சந்தர்ப்பத்தில் அது திருட்டாகக் கணிக்கப்படும், எச்சந்தர்ப்பத்தில் தண்டனை வழங்க வேண்டும் என்பது தொடர்பாக விரிவாக குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பாக இப்னு அர.்.பா கூறுகிறார்: அரபு மொழியில் திருடன் என்றால், 'பாதுகாப்பாக வைக்கப்பட்ட, தனக்குச் சொந்தம் இல்லாத ஒரு பொருளை ஒழிந்து மறைந்து நின்று எடுப்பவன் என்று பொருள். ஆக திருட்டு மூன்று விடயங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதை மேலே கூறப்பட்டவற்றிலிருந்து புரிந்து கொள்ளலாம். அவை, பிறரின் பொருளை முறையின்றி எடுத்தல், அவ்வாறு எடுத்தல் ஒழிந்து நின்று நடைபெற்றிருக்க வேண்டும். எடுக்கப்பட்ட பொருள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பொருளாக இருத்தல் வேண்டும்" என்பனவாகும். எடுக்கப்பட்ட பொருள் ஒருவருக்குச் சொந்தமானதாகவோ, அல்லது ஒழிந்து நிற்காமல் எடுக்கப்பட்டதாகவோ அல்லது பாதுகாப்பற்றதாகவோ வைக்கப்பட்டிருந்தால் தண்டனைக்குரிய திருட்டாக அதனை உறுதி செய்ய முடியாது என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகவும் உள்ளது.

இது தவிர திருடுவது பெரும் பாவமாக இஸ்லாம் நோக்குகின்றது. "அநாதைகளிடம் அவர்களின் சொத்துக்களை நீங்கள் கொடுத்து விடுங்கள். நல்லதுக்குப் பதிலாக கெட்டதை மாற்றிவிடாதீர்கள். உங்களுடைய சொத்துகளுடன் சேர்த்து அவர்களுடைய சொத்துக்களை உண்ணாதீர்கள். **நிச்சயமாக இது பெரும் பாவமாக இருக்கிறது** (சூரா அன்னிசா: வசனம் 2). அதேபோன்று நபியவர்கள் செய்யக் கூடாது என வாங்கிய வாக்குறுதிகளில் திருட்டும் ஒன்றாகும். இது தொடர்பாக உபாதா பின் அஸ்ஸாமித் (ரழி) கூறியதாவது: நான் (பத்துப் பேருக்குக் குறைவான) ஒரு குழுவினருடன் சென்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் உறுதி மொழி அளித்தேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் **'நீங்கள் அல்லாஹ்விற்கு இணை கற்பிப்பில்லை. திருடுதில்லை, உங்களிடையே அவதூறு கற்பித்து அதைப் பரப்புவதில்லை, குழந்தைகளைக் கொல்வதில்லை, நற்காரியங்களில் எனக்கு மாறு செய்வதில்லை'** என்று வாக்குறுதி வாங்கக் கூடியவர்களாக நபியவர்கள் இருந்தார்கள்." (ஸஹீஹ் புகாரி 6801).

மேலும் திருடுபவன் தொடர்பாக நபி (ஸல்) அவர்கள்: **"தனக்கு சொந்தமில்லாத ஒன்றைக் குறித்து அது தனக்குறியதுதான் என்று கூறிக்கொள்பவன் நம்மைச் சார்ந்தவர் அல்ல. அவன் தன் இருப்பிடத்தை நரகத்தில் அமைத்துக் கொள்ளட்டும்"** (முஸ்லிம் 112). மேலும், **"திருடன் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்"** (புகாரி 6799). என்று நபியவர்கள் சாபமிடுவதன்

மூலம் திருட்டுக் குற்றத்தின் தாத்பரியமும், அதன் இஸ்லாமிய நிலைப்பாட்டினையும் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இது மாத்திரமின்றி திருட்டுக் குற்றத்தை கட்டுப்படுத்துவதற்காகவே இஸ்லாம் திருட்டின் தன்மை, அது மேற்கொள்ளப்பட்ட சூழல், திருடியவரின் பின்னணி என்பவற்றை ஆராய்ந்து அதற்கேற்ற தீர்ப்பினை வழங்குமாறு வழியுறுத்துகின்றது.

### *3.2.3. தவறான பாலியல் நடத்தையில் ஈடுபடாமை*

இஸ்லாம் ஆண், பெண் இருவரையும் மதிக்கிறது. மனிதர்கள் அனைவரும் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்து படைக்கப்பட்டார்கள் என்பதன் மூலம் சமத்துவத்தைப் போதிக்கின்றது: **"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஓர் பெண்ணிலிருந்தே படைத்தோம்: நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர் உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கிறாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சியமாக அல்லாஹ் நன்கறிபவன். (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்** (அல்குர்ஆன், சூரா அல் ஹுஜ்ராத்: வசனம் 13).

எனினும் அவர்கள் தவறான பாலியல் நடத்தையில் ஈபடுவதனை வண்மையாகக் கண்டிக்கிறது. அதேபோன்று பாலியல் நடத்தையில் ஈடுபடாமலிருப்பதற்கு அண்ணியபெண்ணுடன் தனிமையில் இருத்தல் '**அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டவர் ஒரு மஹ்ரம் இல்லாத நிலையில் ஒரு பெண்ணுடன் தனிமையில் இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் அவர்களுடன் மூன்றாமவனாக ஷைத்தான் இருப்பான்.**'' (அஹ்மத்). ஆண் பெண்னை அல்லது பெண் ஆணை இச்சையுடன் பார்த்தல் (நபிவழி ஆதாரம் புகாரி, முஸ்லிம்)., கெட்ட பார்வை, அரைகுறை ஆடைகள் என்பவற்றை தடைசெய்துள்ளது.

இது இவ்வாறு இருந்தாலும் மனிதனுக்கு என்ற ஓர் பாலியல் உணர்வு இருக்கின்றது அதனை அழகிய நிவர்த்தி செய்துகொள்வதற்காக திருமணத்தை ஆகுமாக்கியுள்ளது **"நீங்கள் (அமைதி) ஆறுதல் பெறுவதற்குரிய துணையை உங்களில் இருந்தே உங்களுக்காகப் அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே அன்பையும் கிருபையையும் ஏற்படுத்தி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்**'' (சூரா அர் ரூம்: வசனம் 21). இஸ்லாம். எனினும் தன்னைத் தானே வருத்திக் கொள்ளக்கூடிய துறவறத்தை இஸ்லாம் ஆகுமாக்கவில்லை **ஆனால் அவர்கள் தாங்களே புதிதாக உண்டாக்கிக் கொண்ட துறவறத்தை நாம் அவர்கள் மீது விதிக்கவில்லை. அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடைய வேண்டியேயன்றி (அவர்கள் அதனை உண்டு பண்ணிக் கொண்டார்கள்). ஆனால், அதைப் பேணுகிற அளவுக்கு அவர்கள் அதனை சரிவர பேணவில்லை**…'' (திருக்குர்ஆன், சூரா அல் ஹதீத்: வசனம் 27).

மேலும் புகாரியில் மிக நீண்ட ஹதீஸ் ஒன்றும் பதிவாகியுள்ளது (புகாரி 5063). ஏன் எனில் அது மனிதனை தன்னைத்தானே துன்புறுத்துவதாக உள்ளது.

**நற் செயல்களினால் கிடைக்கும் நன்மைகள்**

இவ்வாறு ஈமான் கொண்டு நல் அமல்கள் செய்பவருக்கே இறைவனின் உதவி கிடைக்கும் என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. ''ஆணாயினும், பெண்ணாயினும் எவர் ஈமான் (நம்பிக்கை) கொண்டவராக இருந்து (ஸாலிஹான அமல்களை) நற் செயல்களைச் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க தூய வாழ்க்கையில் வாழச் செய்வோம். இன்னும் (மறுமையில்) அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிலிருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக நாம் கொடுப்போம்'' (சூரா அந்நஹ்ல்: வசனம் 97).

மேலும், ''உங்களில் எவர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) நற் செயல்கள் புரிகிறர்களோ – அவர்களை, அவர்களுக்கு முன்னிருந்தோரை(ப் பூமிக்கு) ஆட்சியாளர்களாக்கியது போல், பூமிக்கு நிச்சயமாக ஆட்சியாளர்களாக்கி வைப்பதாகவும், இன்னும் அவன் அவர்களுக்காக

பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக நிலைப்படுத்துவதாகவும், அவர்களுடைய அச்சத்தைத் திட்டமாக அமைதியைக் கொண்டு மாற்றி விடுவதாகவும், அல்லாஹ் வாக்களித்திருக்கிறான்'' (சூரா அந் நூர்: வசனம் 55).

இறைவனுடைய நேசம் கிடைக்க வேண்டுமாயின் நல்லமல்களின் பக்கம் விரைய வேண்டும். ''நிச்சயமாக எவர்கள் ஈமான் கொண்டு (ஸாலிஹான) நற் செயல்கள் புரிகிறார்களோ அவர்களுக்கு அர்ரஹ்மான் (யாவரின்) நேசத்தை ஏற்படுத்துவான்'' (சூரா மர்யம்: வசனம் 96).

''எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்களைச் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்கள் செய்யும் (நற்) கருமங்களின் காரணமாக சுவனபதிகள் தங்குமிடங்களாகி (அங்கு அவர்கள்) விருந்தினராய் (உபசரிக்கப்படுவார்கள்)'' (சூரா அஸ் ஸஜ்தா: வசனம் 19).

''அவர்கள் செய்த (நற்) கருமங்களுக்குக் கூலியாக மறைத்து வைக்கப்பட்டுள்ள கண் குளிர்ச்சியை (மறுமையின் பேரின்பத்தை) எந்த ஓர் ஆன்மாவும் அறிந்து கொள்ள முடியாது'' (சூரா அஸ் ஸஜ்தா: வசனம் 17).

நற்செயல் என்பது தர்மம் செய்வதற்கு சமமானதாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''சூரியன் உதிக்கும் ஒவ்வொரு நாளிலும், இருவருக்கு மத்தியில் நீ சமாதானம் செய்துவைப்பது தர்மமாகும். ஒருவரை அவரது வாகனத்தில் ஏறுவதற்கு அல்லது அவரது பொருளை அதன்மீது ஏற்றுவதற்கு நீ உதவி செய்வதும் தர்மமாகும். நல்ல வார்த்தைகளைக் கூறுவது தர்மமாகும். தொழுகைக்கு செல்ல எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியும் தர்மமாகும். இடையூறு அளிப்பவைகளை பாதையிலிருந்து அகற்றுவது தர்மமாகும்.'' (ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்).

மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரழி) அறிவிக்கிறார்கள்: ''அனைத்து நற்செயல்களும் தர்மமாகும்.'' (ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி). மேலும், ஒரு மனிதன் தன் வாழ்வின் சகல கட்டங்களிலும், சகல நிலைமைகளிலும் எவ்வாறு தனது செயல்களை (அமல்களை) அமைத்துக் கொள்ள வேண்டும் அதாவது ஸாலிஹாக (நல்லதாக) மாற்றிக் கொள்ள வேண்டும் என அல்லாஹுதஆலா அருளிய கட்டளைகளை, ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஒரு அழகிய முன்மாதிரியான வாழ்க்கையாக அறிமுகப்படுத்தி, வாழ்ந்தும் காட்டியிருக்கிறார்கள். மனிதர்களுக்கு பயனளிக்கும் செயலை செய்வதும் நன்மையாகும்: அபூ பர்ஸா (ரழி) அவர்கள் கூறினார்கள்: நான் நபி (ஸல்) அவர்களிடம், ''அல்லாஹ்வின் தூதரே! நான் பயன் பெறும்படியான விஷயங்களை எனக்குக் கற்றுத் தாருங்கள்'' என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், ''முஸ்லிம்கள் நடக்கும் பாதையிலிருந்து இடையூறு தருபவைகளை அகற்றுங்கள்'' எனக் கூறினார்கள். (ஸஹீஹ முஸ்லிம்) மற்றோர் அறிவிப்பில்: ''என்னை சுவனத்தினுள் நுழைய வைக்கும் அமலை (செயலை) எனக்குக் கற்றுத் தாருங்கள்'' என்றபோது, நபி (ஸல்) அவர்கள் ''பாதையிலிருந்து இடையூறு அளிப்பவற்றை நீர் அகற்றிவிடும். அது உமக்கு தர்மமாகும்'' (ஆதாரம்: முஸ்னத் அஹமத்) என்று கூறினார்கள்.

**தீய செயல்களினால் கிடைக்கும் தண்டனைகள்:**

''எவர் அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களோ அவர்கள் தங்களை (இம்மையில்) சோதனை பிடித்துக் கொள்வதையோ, அல்லது தங்களை (மறுமையில்) நோவினை தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும்.'' (சூரா அந்நூர்: வசனம் 63). பிரிதொரு வசனத்தில் ''மனிதர்களில் கைகள் தேடிக் கொண்ட (தீச் செயல்களின்) காரணத்தால் கடலிலும் தரையிலும் (நாசமும்) குழப்பமும் தோன்றின. (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பி விடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே (தீவினைகள்) அவற்றில் சிலவற்றை (இவ்வுலகிலும்) அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான்.'' (சூரா அர் ரூம்: வசனம் 41).

"எவன் என்னுடைய உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும். மேலும், நாம் அவனை கியாம நாளில் குருடனாவே எழுப்புவோம்" (சூரா தாஹா: வசனம் 124).

இவ்வுலகில் நற்செயலை செய்யாதவர்கள் நாயை மறுமையில் தம் இறைவனிடம் மீண்டும் தம்மை பூமிக்கு அனுப்புமாறு இறைஞ்சுவார்கள். ஏன் எனில் விடுபட்ட நற்காரியங்களை செய்வதற்காக எனினும் அது பயனளிக்காது: இன்னும் அந்நரகத்தில் அவர்கள் "எங்கள் இறைவா நீ இதைவிட்டு எங்களை வெளியேற்றுவாயாக! நாம் வழக்கமாக செய்து கொண்டிருந்ததல்லாத நற்செயலை செய்வோம்" என்று கூறுவார்கள். அதற்கு அல்லாஹ் சிந்தித்துப் பார்க்கக்கூடியவன் அதில் சிந்திக்கும் கொருட்டு நாம் உங்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கவில்லையா? உங்களிடம் அச்சமூட்டி எச்சரிப்பவரும் வந்திருந்தார். ஆகவே நீங்கள் செய்த அநியாயத்தின் பயனைச் சுவையுங்கள். ஏனென்றால் அநியாயக்கார்கயுக்கு உதவுபவர் எவருமில்லை."(சூரா அல் பாதிர்: வசனம் 37)).

மேலும் அல்லாஹ் இவ்வாறு வெறும் வாய்வார்த்தைகளாகவே இறைஞ்சுகிறார்கள் என்று கூறுகிறான். "நான் விட்டுவந்ததில் (இனிநற்செயலை) செய்வதற்காக! என்றும் கூறுவான். இனி அவ்வாறில்லை. நிச்சயமாக – அது அதைப்பற்றி கூறுகின்ற வெறும் வார்த்தையேயாகும் (சூரா அல் முஃமினூன்: வசனம் 100).

பெரும்பாலான நல்ல மற்றும் தீய செயல்கள் மனிதனுடைய ஐம்புலன்களினாலே இடம்பெறுகின்றது. இவ் ஐம் புலன்களுக்கும் இவ்வுலகில் பேசுவதற்கான சக்தி இல்லை. எனினும் நாளை மறுமையில் அவை செய்த காரியங்கள் தொடர்பாக பேசும். மனிதனுக்கு எதிராகவே திரும்பும்: "இறுதியில் அவர்கள் அதை (அநீதியை) அடையும்போது அவர்களுக்கு எதிராக அவர்களுடைய காதுகளும், அவர்களுடைய கண்களும், அவர்களுடைய தோல்களும் அவர்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி சாட்சி கூறும்" (சூரா சஜ்தா: வசனம் 20).

"ஆகவே! அல்லாஹ்விடமிருந்து எவரும் தடுத்து நிறுத்த முடியாத (அந்தத் தீர்ப்பு) நாள் வருவதற்கு முன் நீர் உம் முகத்தை நிலையான மார்க்கத்தில் நிலை நிறுத்துவீராக. அந்நாளில் அவர்கள் (நல்லோர், தீயோர்) எனப் பிரிந்து விடுவார்கள். (சூரா அர்ரூம்: வசனம் 43). மார்க்கத்தின்பால் திரும்புவது என்பது இறை நம்பிக்கையோடு நற்செயல்களின் பக்கம் திரும்பி நல்லரங்கள் செய்வதாகும்.

## 4. கலந்துரையாடல்

### *4.1. **வேற்றுமை**: பௌத்தமும் இஸ்லாமும் - முரண்படும் இடங்கள் பல உள்ளது,*

பௌத்தம் காரண காரிய விதியை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு இஸ்லாம் இறைப்போதனைகள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துகிறது.

இஸ்லாம் இறைவன் ஒருவன் எனப்படுகின்ற ஓரிரைக் கொள்கையில் நம்பிக்கை கொண்டுள்ள அதே வேளை பௌத்தமானது இறைக் கோட்பாடுகளில் அமைதியான போக்கினைக் கடைப்பிடித்துள்ளதோடு ஓரிரைக் கொள்கை என்பதற்கும் அங்கு இடமில்லை.

பௌத்தம் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டு கர்மாவின் அடிப்படையில் அவனது வாழ்வு அமையும் எனும் நம்பிக்கையைக் கொண்டுள்ளது. எனினும் இஸ்லாம், தான் செய்யக்கூடிய செயல்களுக்குரிய கூழியானது இவ்வுலகில் அல்லது மரணத்திற்குப் பின்னுள்ள மறுமை வாழ்வில் கிடைக்கும் என்ற இறை நம்பிக்கையைக் கொண்டுள்ளது

முஸ்லிம்கள் நற்செயல் செய்வதனுடைய நோக்கங்களாக: முதலாவதாக அது இறைவனுடைய கட்டளையாக உள்ளது. மேலும், இறைவனுடைய நெருக்கத்தை பெற்றுக் கொண்டு நன்மைகளை அடைந்து நாளை மறுமையில் உயர்ந்த சுவர்க்கத்தை அடைந்து கொள்வதற்காகும்.

பௌத்தர்களின் நோக்கம், தங்களுடைய காரண-காரிய விதிக்காகவும், நற்செயல்களினூடாக இறுதியில் பரிநிர்வாணத்தை அடைந்து கொள்வதுமாகும். அதே போன்று இவ்வுலக வாழ்வில் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதுமாகும்.

அதே போன்று பௌத்தம் இறைவன் தொடர்பான கருத்துக்களில் தனது போதனைகளை குறிப்பிடுவதில் பாரிய இடைவெளியைக் கொண்டுள்ளதோடு பௌத்தத்தில் ஓரிரைக் கொள்கைக்கும் இடமில்லை என்பனவாகும்.

நற்செயல்கள் இறைவனுக்காக அவனது பிரதிபலனை எதிர்பார்த்து செய்வதன் மூலம் சுவனத்தை அடையும் நோக்கில் செய்யப்படும்- பௌத்தத்தில் காரண காரிய விதியை மையமாக வைத்து பரிநிர்வாணத்தை அடையும் நோக்கிலும் செய்யப்படும்

### *4.2. ஒற்றுமை :*

பௌத்த மற்றும் இஸ்லாத்திற்கு இடையில் பாரிய வேற்றுமைகள காணப்பட்ட போதிலும் நற்செயல் என்ற விடயத்தில் இரண்டிற்குமிடையே ஒற்றுமை உள்ளதனை அவதானிக்க முடியும். பௌத்தம் மற்றும் இஸ்லாம் இரண்டும் நற்செயல்களை செய்வதற்கு ஊக்குவிப்பதோடு, மோசமான செயல்களிலிருந்து தவிர்ந்து இருக்க கட்டளையடுகின்றது.

பௌத்த ஆரிய அஷ்டாங்க மார்க்கம் அல்லது எட்டு வழிப் பாதை என்பது புத்தர் கற்பித்துத்துத் தந்த அறிவொளிக்கான பாதை ஆகும். இது எட்டு தர்மச் சக்கரத்தால் விளக்கப்படுகின்றது. ஏனெனில் இப்பாதையானது எட்டு செயற்பாட்டின் பகுதிகளால் ஆனதனாலாகும். இவற்றின் மூலம் மனிதனுக்கான தர்மத்தை கற்பிக்கவும், தர்மத்தினை வெளிப்படுத்தவும் உதவுகின்றன.

எட்டு வழிப்பாதையில் நற்செயலானது நான்காவது போதனையாகும். இது சமஸ்கிரதத்தில் சம்யக்-நர்மந்தா என அழைக்கப்படுவதோடு, பாலி மொழியில் சம்மா கம்மந்த என்று அழைக்கப்படுகின்றது. சரியான செயல் பாதையின் நான்காவது அம்சமாகும். சமஸ்கிருதத்தில் சம்யக்-கர்மாந்தா அல்லது பாலியில் சம்ம கம்மந்தா என்று அழைக்கப்படும், நற்செயல் என்பது 'ஒழுக்க நெறிமுறைகளில் ஒரு பகுதியாகும். இது நல்வாய்மை, நல் வாழ்வாதாரம் என்பவற்றுடன் நெறுங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. இம்மூன்றினையும் நாம் அன்றாடம் கடைபிடிக்கின்ற பொழுது எமது அன்றாட வாழ்விலும் மற்றவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாமல் இருக்கவும், நமக்குள் ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்ளவும் கற்றுக்கொடுக்கிறது.

இஸ்லாத்தில் அறிஞர்கள் அனைத்து வெளிப்புறச் செயல்களையும் ஐந்து வகைகளாகப் பிரித்துள்ளனர்: கட்டாயம் (ஃபர்ளு அல்லது வாஜிப்), பரிந்துரைக்கப்பட்ட (முஸ்தஹாப் அல்லது மண்டுப்), அனுமதிக்கப்பட்ட (ஹலால் அல்லது முபாஹ்), ஊக்கப்படுத்தப்பட்ட (மக்ருஹ்) மற்றும் தடை செய்யப்பட்ட (ஹரம்) என்பனவாகும். முதலாவது போதனையை நிறைவேற்றுவதானது (வீட்டின் அடித்தளத்தினை அமைப்பது போன்றது) பின்னர் இறைவனின் கட்டளைக்கு இணங்க அனுமதிக்கப்பட்ட செயல்களைச் செய்வதும், தடைசெய்யப்பட்ட செயல்களிலிருந்து தவிர்ந்து இருப்பதும் (வீட்டினை அலங்கரிப்பது போன்றது) இது வாழ்க்கையை இறைழிகாட்டலின் படி நிறைவேற்றி இறுதி இலக்கான சுவர்க்கத்தினை அடைய வழி அமைக்கும்.

***பௌத்த சம்மாகம்மந்த மற்றும் அமலுத் தய்யிபா வினை விபரிக்கக் கூடிய போதனைகளும் அவற்றினுடைய விளக்கமும்***

| | சம்மாகம்மந்த | அல்-அமல் அத்-தய்யிப் | விளக்கம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 01 | உடலின் செய்யும் தீமையான செயல்களிலிருந்து (உயிர்களைக் கொள்ளுதல், களவு எடுத்தல், தகாத காம செயலில் ஈடுபடுதல்) விடுபட்டு நன்மையானவற்றை செய்தல் வேண்டும் (*Dhammapada: V.* 231). | இஸ்லாம் அனைத்து வணக்கங்களையும் நற்செயலாகவே பார்க்கிறது. "விசுவாசிகளே! நீங்கள் குனிந்து சிரம்பணிந்து உங்கள் இறைவனை வணங்குங்கள். நன்மையே செய்து கொண்டிருங்கள். அதனால் நீங்கள் வெற்றி அடையலாம் (அல்குர்ஆன் அல் ஹஜ்: வசனம் 77). | பௌத்தம்: அனைத்து நற்செயல்களை செய்யுமாறு கட்டளையிட்டும் அனைத்து தீய செயல்களை தடை செய்தும் உள்ளது. எனினும், அஷ்டாங்க மார்க்க நற்செயல் என்ற அடிப்படையில் இந்நான்கினையே குறிப்பிடுகிறது. எனினும் இஸ்லாம், இவ்வாறு குறிப்பிடாமல் எல்லா சமயங்களிலும் நற்செயல்களை செய்யுமாறும், தீய செயலில் இருந்து தவிர்ந்து இருக்குமாறும் குறிப்பிடுகிறது. |
| 02 | நற்குணமுள்ளவர்களின் சீல சுகந்தம் இவற்றிலும் மேலானதாகும். அந்த சுகந்தம் தேவலோகம் வரை பரவிச்செல்லும் (*Dhammapada: V.* 56). | "…..எவர் அல்லாஹ்வின் மீதும் இருதிநாளின் மீதும் நம்பிக்கை கொண்டு நல்லறம் செய்கிறார்களோ, அவர்களின் நற்கூலி நிச்சியமாக அவர்களின் இறைவனிடம் உண்டு" (சூரா பகரா: வசனம் 62). | இஸ்லாம் மறுமை என்ற கோட்பாட்டில் நம்பிக்கை வைத்துள்ளதால் அனைத்து நற்செயல்களுக்குமான கூலி மறுமையில் கிடைக்குமென குறிப்பிடுகிறது. பௌத்தம் அவ்வாறு குறிப்பிடவில்லை |
| 03 | | "அனைத்து நற்செயல்களும் தர்மமாகும்." (ஸஹீஹுல் புகாரி). | இஸ்லாம் அனைத்து நற் செயல்களும் தர்மம் என குறிப்பிடுவதனால் அனைத்து, நற் செயலிற்கும் நன்மையை வழங்குவதாகவும், அதற்குரிய கூலி இம்மை மற்றும் மறுமையில் உண்டு என்கிறது. எனினும் பௌத்தம் செயல்களுக்கான கூலி கர்மா அடிப்படையில் மறுபிறவியில் கிடைக்கும் என்கிறது. |

## 5. முடிவுரை

உண்மையில் பௌத்தம் போதிக்கின்ற சம்மாகம்மந்த மற்றும் இஸ்லாம் போதிக்கும் அமலுத் தய்யிப்: நற்செயல் பற்றிய பௌத்த-இஸ்லாமிய கலந்துரையாடலானது நெருங்கிய ஒற்றுமைகளை விளக்குவதாக அமையப்பெற்றுள்ளது. நற்செயல் முக்கியமான ஒரு மனித வெளிப்பாடாகும். நற்செயல்கள் நல் மனிதர்களின் முக்கியமான பண்பாகும். மோசமான செயல்கள், பாரிய பின்விளைவுகளைக் கொண்டுவரும் அது மோசமான கர்மாவையும் மறுபிறவியையும் கெண்டுவந்து சேர்க்கும் என்பது பௌத்தத்தின் போதனையாகும். மோசமான செயல்கள், சுவன வாழ்வுக்கு தடையாக அமையும் என்பது இஸ்லாத்தின் போதனையாகும். இஸ்லாத்தின் பார்வையில் ஒருவர் இன்னொருவர் மீது அநியாயம் செய்தால் குறிப்பிட்ட பாதிக்கப்பட்டவர் மன்னிக்கும்வரை இறைவனிடத்தில் மன்னிப்புக் கிடைக்காது. என்றாலும் பௌத்தமானது, சம்மாகம்மந்த என்ற நற்செயல், எண்மார்க்கத்தின் ஊடாக விளக்கி அது பரி-நிர்வாணத்தை நோக்கிய பாதையில் முக்கிய ஒன்றாக விளக்குகின்றது. இஸ்லாம் அல்-அமல் அத்-தய்யிப் என்ற நற்செயல்: ஒரு வணக்கமாகவும், சுவனவாழ்வுக்கான நன்மைகளைப் பெற்றுத்தரும் ஒரு அடிப்படையாகவும் பார்க்கின்றது.

## References


Aadhi, (2015). *Boomith thaaikkum Urimai undu*, Hindu Tamil,From: http://www.hindutamil.in

Akram, M. (2006). *Nadaimuraik Ketra Islam – Chapter 1*. Pasiyala: Musalman Publication.

Akram, M. (2006). *Nadaimuraik Ketra Islam – Chapter 2*. Colombo: Hisbullah Trust Islamic book house.

Al Gazzhali, M. (2009). Islamiya olukka maanbuhal. Thinnaith tholarah publication.

Ameen, C.M.A. (2012). Hindu, Buddhism & Islam- a Comparative study. Thihariya: Reshma publication house

*Dhammapada* , (2013). Taipei: The Corporate Body of the Buddha Educational Foundation.

Editers of the light of Damma. (1978). *The Five Nikayas Discourses of the Buddha*. Burma: Department of Religious Affairs.

Gokaru, S. (2013, December). A Comparative study of the concept of God in Islam and Buddhism. Retrieved November 26, 2020, from http://www.researchgate.net

Harvey, H. (2013). *An Introduction to Buddhism*. Cambridge University Press.

Harvey, P. (2013) *An Introduction to Buddhism: Teachings, History and Practices, Cambridge University Pres*, Second , https://doi.org/10.2307/604489.

Harwey, P. (2000). *An introduction to Buddhist Ethics.* Cambridge University Press.

Kiribathgoda Niyananandha Thero. (2018). *Maatra muraatha unnatha sathtiyam*. Mahamega Publication

Nayanika, V. (2020, January). The Buddhist Approach to Establish Peace though five Precepts. *International Jounal of Science and Researcdh.* ISSN: 2319-7064 https://www.ijsr.net

Nayanika, V. (2020, January). The Buddhist Approach to Establish Peace though five Precepts. *International Jounal of Science and Research*. Retrieved January 29, 2021, from http://www.ijsr.net

O'Beren, B. (2019, March 13). *The fifth Buddhist Precepts is Drinking Alchohol*. Learn Religion: http://www.learnreligion.com

O'Brien, B. (2019, june 25). *The second Precept of Buddhist; Not Stealing*. Learn Religion: http://www.learnreligion.com

Riyaz, A. (2018). Buddhist Ethics of Pancha Sila; Solution to the Present Day and Future Proublem. 30,(1).

Sabik, s. (2016). *Fiqh sunnah paaham ettu*. Islamic foundation trust.

Samyuktha Nikayam, Part 5 – Dhamma Chakka Pawathtana Sooththiram

Sanu Mahatthanadull, (2020). The Five *Precepts: Criteria and the Promotion of Individual and Social Peace.* Mahachulalongkornrajavidyalaya University.

Saddhatissa, H. (1987). *Buddhist Ethics.* London: Wisdom Publication.

Suriya Mohd Nor, N. (2019, December). Islam and Buddhism: Similarities of Moral Practices. *AL-ITQAN, Journal of Islamic Science and Comparative Stidies.*, *3*(02). http://journals.iium.edu.my/al-itqan/index.php/alitqan/index

Shree, S. & Sharma, L., (2014). "The Eightfold path Buddhism for an Effective and Credible Leadership'. vol.viii., SMS VARANASIRI.

Tiwari, M. (1989). Perspective on Buddhist Ethics. Department of Budddhist Ehics

Thahabi., 'Al-Khafair (Perum paawangl). (n.d) https://fiqh.islamonline.net/الكبائر-و-السبع-الموبقات/

"The Five Precepts: Pañca-Sila, "Access to Insight Readings in Theravada Buddhism, accessed August 15, 2021, https://www.accesstoinsight.org/ptf/dhamma/sila/pancasila.html.

Uthaphun, P. (2017). A Comparative study of Sila (five Precepts) in Theravada Buddhism and Jainism. *Journal of MCU Buddhism Review*. 1,(1). Mahamakut Buddhist University Isan Campas, Khonkaen. http://researchgate.net